# மஜ்லிஸே ஷூரானின் முக்கியத்துவமும் ஷூரா உறுப்பினர்கள் மற்றும் ஜமாஅத் பொறுப்பாளர்களின் பொறுப்புகளும்

ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத்
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

வெளியிடுவோர்
இந்திய மஜ்லிஸே ஷூரா அலுவலகம்

# மஜ்லிஸே ஷூராவின் முக்கியத்துவமும் ஷூரா உறுப்பினர்கள் மற்றும் ஜமாஅத் பொறுப்பாளர்களின் பொறுப்புகளும்

**ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத்**
ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்
(அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

**வெளியிடுவோர்**
மஜ்லிஸே ஷூரா அலுவலகம்
காதியான், இந்தியா

Tamil Translation of the Urdu Book

# MAJLISE SHURA KI AHMIYAT AUR MEMBARANE SHURA WA UHDEDARANE JAMA'AT KI ZIMMADARIYAN


| | |
|---|---|
| Friday Sermon Delivered by | : Hazrat Mirza Masroor Ahmad[aba] (Khalifatul Maseeh V) |
| Compiled by | : Majlise Shura Bharat |
| Translated by | : Maulavi A.P.A. Thariq Ahamed |
| Composed & Bookset by | : Maulavi A.P.A. Thariq Ahamed |
| First Edition | : 2025 |
| Copies | : 300 |
| Publisher | : Office Majlis-e-Shura Bharat, Qadian - 143 516 Gurdaspur Dist. Punjab, India |
| Printer | : Fazl-e-Umar Printing Press Gurdaspur, Qadian - 143 516 Punjab, India |

## பதிப்புரை

சய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் மே 12, 2023 அன்று யூ.கே - டில்ஃபோர்ட், இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரை ‘மஜ்லிஸே ஷூராவின் முக்கியத்துவமும் ஷூரா உறுப்பினர்கள் மற்றும் ஜமாஅத் பொறுப்பாளர்களின் பொறுப்புகளும்’ என்ற தலைப்பில் நூலாக வெளிவருகிறது. இந்த நூலை தமிழ்த்துறை இன்சார்ஜ் மவ்லவி A.P.A தாரிக் அஹ்மது சாஹிப் அவர்கள் தமிழாக்கம் செய்து தந்துள்ளார்கள்.

இதை, சரிபார்ப்புக் குழு உறுப்பினர்களான மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மது சாஹிப் அவர்களும், மவ்லவி அத்தாவுல் முஃக்னீ சாஹிப் அவர்களும் மூல நூலுடன் சரிபார்த்து திருத்தங்களை செய்துள்ளார்கள். மேலும், தமிழ்நாடு நூல் சரிபார்ப்புக் குழுவின் தலைவர் ஜனாப் J.S. சலீம் அஹ்மது சாஹிப் அவர்கள் இந்நூலின் மொழியாக்கத்தை முழுமைப்படுத்துவதில் ஒத்துழைப்பு நல்கியுள்ளார்கள்.

அவர்கள் அனைவருக்கும் அல்லாஹ் மேலான வெகுமதியை வழங்குவானாக! ஆமீன்.

வஸ்ஸலாம்

எளியவன்
**ஹாஃபிஸ் மக்தூம் ஷரீஃப்**
நாஸிர் நஷ்ரோ இஷாஅத் காதியான்

| எண் | பொருளடக்கம் | பக்கம் |
| --- | --- | --- |
| 1 | சூரா ஆலி இம்ரான் வசனம் 160 இறங்கியபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறிய விளக்கம் | 6 |
| 2 | ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆலோசனை பெறுவதற்கு மேற்கொண்ட மூன்று வழிமுறைகள் | 7 |
| 3 | ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆலோசனை கேட்ட ஒரு சம்பவம் | 10 |
| 4 | ஷூராவுக்கான பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் மக்களுக்கான அறிவுரை | 15 |
| 5 | ஆலோசனை கூறுபவருக்கு அறிவுரை | 16 |
| 6 | ஆலோசனை கூறுபவர் தம் கருத்தை எடுத்து வைக்க வேண்டிய பொருத்தமான வழிமுறை | 20 |
| 7 | அவைத்தலைவர் பரந்த மனப்பான்மை, நல்லெண்ணம் மற்றும் சகிப்புத்தன்மையுடன் பதிலளிக்க வேண்டும் | 20 |
| 8 | ஷூராவின் தீர்மானங்கள் செயல்படுத்தப்படாமல் இருக்கும்போது மேற்கொள்ள வேண்டிய வழிமுறை | 24 |
| 9 | ஒரே ஆலோசனை மீண்டும் மீண்டும் ஷூராவில் எடுத்து வைக்கப்படுகிறதென்றால் அதற்கான காரணம் | 26 |
| 10 | உலகில் அனைத்து நாடுகளிலும் ஷூராக்கள் நடத்தப்படுவதற்கான காரணம் | 32 |

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ-

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ- بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿١﴾

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿٢﴾ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿٣﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿٤﴾

إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿٥﴾ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿٦﴾

صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿٧﴾

فَبِمَا رَحْمَةٍ مِّنَ اللّٰهِ لِنْتَ لَهُمْ ۚ وَلَوْ كُنْتَ فَظًّا غَلِيْظَ الْقَلْبِ لَانْفَضُّوْا مِنْ حَوْلِكَ ۖ

فَاعْفُ عَنْهُمْ وَاسْتَغْفِرْ لَهُمْ وَشَاوِرْهُمْ فِي الْاَمْرِ ۚ فَإِذَا عَزَمْتَ فَتَوَكَّلْ عَلَى اللّٰهِ ۗ

اِنَّ اللّٰهَ يُحِبُّ الْمُتَوَكِّلِيْنَ ۝

(திருக்குர்ஆன் 3:160)

வசனத்தின் மொழியாக்கம் இதுவாகும்:

“அல்லாஹ்விடமிருந்து (உமக்கு வழங்கப் பெற்று)ள்ள சிறப்பான அருளின் காரணமாக நீர் அவர்களுக்கு மென்மை வாய்ந்தவராகத் திகழ்கின்றீர். நீர் தீய ஒழுக்கமும், கடின உள்ளமும் உடைவராக இருந்திருப்பின், அவர்கள் உம் சூழலில் இருந்து நிச்சயமாக சிதறிச் சென்றிருப்பர். எனவே, நீர் அவர்களை மன்னித்து அவர்களுக்காக (இறைவனிடம்) மன்னிப்புக் கோருவீராக. மேலும், (ஒவ்வொரு) முக்கிய விஷயங்களில் அவர்களுடன் கலந்தாலோசனை செய்வீராக. பின்னர் நீர் (எது பற்றியும்) முடிவு எடுத்துவிட்டால் அல்லாஹ்வின் மீதே நம்பிக்கை வைப்பீராக. நிச்சயமாக அல்லாஹ் நம்பிக்கை வைப்பவர்களிடம் அன்பு கொள்கின்றான்.

இந்நாட்களில் பல்வேறு நாடுகளில் ஜமாஅத்-துடைய மஜாலிஸே ஷூரா (ஆலோசனைக் கூட்டங்கள்) நடைபெறுகின்றன. சில நாடுகளில் நடந்து முடிந்து விட்டன. சில நாடுகளில் இவ்வாரம் நடக்கின்றன. சில நாடுகளில் வருகின்ற வாரங்களில் நடக்கவிருக்கின்றன. ஜெர்மனியில் இன்று துவங்குகிறது. அத்துடனேயே இன்னும் பல நாடுகளில் நடைபெற இருக்கின்றன. அவ்வாறே, யூ.கே உடைய மஜ்லிஸே ஷூரா (ஆலோசனைக் கூட்டம்) அடுத்த வாரம் நடைபெற உள்ளது. அத்துடன் இன்னும் சில நாடுகளிலும் அடுத்த வாரம் நடைபெற உள்ளது.

ஷூராவின் முக்கியத்துவம் குறித்தும் பிரதிநிதிகளின் பொறுப்புகள் குறித்தும் இதற்கு முன்பும் நான் குத்பாக்களில் கவனமூட்டியுள்ளேன். அது கூறப்பட்டு சில வருடங்கள் கழிந்து விட்டன. ஆகவே, அல்லாஹ்வின் கட்டளை, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்மாதிரி, ஜமாஅத்தின் மரபுகள் வழிமுறைகள் ஆகியவற்றைக் குறித்து இன்று மீண்டும் எடுத்துக் கூறுவதை நான் பொருத்தமானதாகக் கருதுகிறேன்.

எங்கெல்லாம் ஆலோசனைக் கூட்டங்கள் நடந்து முடிந்து விட்டனவோ அங்குள்ள ஷூராவின் உறுப்பினர்களும் ஷூராவின் உறுப்பினர்களின் பொறுப்புகள் குறித்து கவனமூட்டப்படும் இவ்-விஷயங்களிலிருந்து பயன் பெறலாம்; அந்த விஷயங்களை ஷூராவின் உறுப்பினர்கள் நினைவில் கொள்ள வேண்டும். ஏனெனில், **மஜ்லிஸே ஷூராவின் பரிந்துரைகள் மற்றும் அவை பற்றி காலத்தின் கலீஃபாவின் தீர்ப்பிற்குப் பிறகுதான் உறுப்பினர்களின்**

**சில பொறுப்புகள் தொடங்குகின்றன.** மேலும் அவற்றை நிறைவேற்றுவதும், தமது பங்களிப்பை வழங்குவதும் ஷூராவுடைய ஒவ்வொரு பிரதிநிதிக்கும் கடமையாகிறது.

எவ்வாறிருப்பினும், அந்தப் பொறுப்புகளின் பக்கம் கவனமூட்டுவதற்கு முன் நான் ஓதிய இந்த வசனத்தின் ஒளியில் சில விஷயங்களை எடுத்துரைப்பேன். மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்மாதிரியையும், அவர்களின் வழிமுறையையும் குறித்து எடுத்துரைப்பேன்.

இவ்வசனத்தில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் சிறப்பான அருளினால் தம் உம்மத்தின் நபர்களுக்கு மிக்க மென்மையான உள்ளமுடையவர்களாகத் திகழ்ந்தார்கள் என்பது உண்மைப்படுத்தப் பட்டிருக்கின்ற அதே வேளையில், **ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பணியை முன்னெடுத்துச் செல்லும் பொறுப்பு எவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதோ, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புகளுக்கேற்ப அவர்களின் தொண்டராக வந்திருக்கும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தி அவர்களின் கொள்கையைப் பரப்பும் பணியை நிறைவு செய்யும் பொறுப்பு எவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதோ அவர்களும் அன்புடனும், நேசத்துடனும், மென்மையுடனும் பணியாற்ற வேண்டும் என்ற விஷயத்தின் பக்கமும் அல்லாஹ் நமக்கு கவனமூட்டியுள்ளான்; வழிகாட்டியுள்ளான்.**

மென்மை காட்டவில்லை என்றால், கடுமையான உள்ளத்தை வெளிப்படுத்தினால், கோபப்படக் கூடியவராக இருந்தால் இம்மக்கள் விலகிச் சென்று விடுவார்கள் என்று அல்லாஹ் கூறுகிறான். ஆகவே, கண்டும் காணாதிருக்குமாறும், மன்னிக்க வேண்டும் என்றும், துஆ செய்யுமாறும் அல்லாஹ் கட்டளையிடுகின்றான். பிறகு, அத்துடனேயே ஆலோசனை கேட்குமாறும் கட்டளை இட்டிருக்கின்றான்.

ஆகவே, இந்தக் கொள்கையையும், போதனையையும் அடிப்படையாகக் கொண்டவாறு ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. ஆனால், **பெயரிலிருந்து வெளிப்படுவதைப் போன்று, இது ஆலோசனைக் கூறும் கூட்டமாகும்; தீர்மானிக்கும் கூட்டம் அல்ல!**

ஆகவே, அல்லாஹ் கூறுகின்றான்: ஆலோசனைகளுக்குப் பிறகு நீர் என்ன தீர்மானம் எடுக்கின்றீரோ அதில் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்தவாறு செயல்படுவீராக. மேலும், அல்லாஹ்வின் மீது நம்பிக்கை இருந்தால், பிறகு அல்லாஹ் அதன் விளைவுகளையும் அளவற்ற அருள்களைக் கொண்டவையாக வெளிப்படுத்துவான். இறைவன் மீது நம்பிக்கை வைப்பது என்பதன் உயரிய உதாரணம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் நமக்குத் தென்படுகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அதிகமான விவகாரங்களில் அல்லாஹ்விடமிருந்து நேரடியாக வழிகாட்டல்கள் கிடைத்து வந்தன. ஆனால் அல்லாஹ்வின் சார்பாக தெளிவான கட்டளை இல்லாத விவகாரங்களில்

குறிப்பாக அவர்கள் கண்டிப்பாக - ஆம் - கண்டிப்பாக ஆலோசனைகளைக் கேட்டு வந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த நடைமுறையும், அல்லாஹ்வின் இந்தக் கட்டளையும் ஜமாஅத்தின் பொறுப்பாளர்கள் ஜமாஅத் உறுப்பினர்களுடன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதையும், பரஸ்பரம் ஆலோசனைகளுடன் நாம் பணியாற்ற வேண்டும் என்பதையும் நமக்குக் கூறுவதற்காகத்தான் இருக்கின்றன.

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மீது அல்லாஹ்வின் பேரருள் என்னவென்றால், கிலாஃபத் எனும் அருளை அவன் வழங்கி இருக்கின்றான். ஆகவே, **அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நடைமுறைக்கேற்ப, காலத்தின் கலீஃபாவும் உலகில் பரவியுள்ள ஜமாஅத்துகளிடமிருந்து அங்குள்ள சூழ்நிலைகளுக்கேற்ப ஆலோசனைகளைக் கேட்கிறார்.**

அல்லாஹ் விரும்பியிருந்தால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எல்லா விவகாரங்களிலும் அவனே வழிகாட்டல் வழங்கியிருப்பான் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால், சில விவகாரங்களில் (மக்களிடம்) ஆலோசனை கேட்குமாறு அன்னாருக்கு கட்டளை வழங்கினான்.

எனவே, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சில விவகாரங்களில் ஆலோசனை கேட்டார்கள். இவை உண்மையில் நம்மை சரியான பாதையில் வழி நடத்துவதற்கும், பரஸ்பர ஒத்துழைப்பு மற்றும் ஆலோசனையுடன் பணியாற்றுவதன் பக்கம்

வழிகாட்டுவதற்கும், சமுதாயத்தில் ஒற்றுமையை உருவாக்குவதற்குமே ஆகும். இதைக் குறித்து ஒரு ஹதீஸிலிருந்து விளக்கம் கிடைக்கிறது.

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலியல்லாஹு அன்ஹுமா) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

شَاوِرْهُمْ فِى الْاَمْرِ

அதாவது, முக்கிய விஷயங்களில் அவர்களுடன் கலந்தாலோசனை செய்வீராக எனும் வசனம் இறங்கிய போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் இதை விட்டும் தன்னிறைவு பெற்றவர்களாக இருக்கின்றார்கள் என்ற போதிலும், இதை அல்லாஹ் எனது உம்மத்திற்கு அருளுக்குக் காரணமாக ஆக்கியுள்ளான். ஆகவே, அவர்களில் ஆலோசனை செய்யக் கூடியவர் நேர்வழியை விட்டு இழப்பிற்குரியவராக இருக்க மாட்டார். ஆலோசனை செய்யாதவர் இழிவிலிருந்து தப்பிக்க முடியாது. (அல்ஜாமிவு லிஷுஅபில் ஈமான், தொகுதி 10 பக்கம் 41 ஹதீஸ் எண் 7136, வெளியீட்டாளர்: மக்தப(த்)துர் ருஷ்த், ரியாத் 2003 ஆம் ஆண்டு பதிப்பு)

எனவே, **ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோ இந்த ஆலோசனைகளை விட்டும் தன்னிறைவு பெற்றவர்களாக இருந்தார்கள்; தன்னிறைவு பெற்றவர்களாக இருக்கின்றார்கள். ஆனால், அவ்வாறிருந்தும் இந்த உம்மத் எப்பொழுதும் அல்லாஹ்வின் அருளிலிருந்து பங்கு பெற்றுக் கொண்டும், எப்பொழுதும் நேர்வழியின் வழிகளில் சென்றுகொண்டும், இழிவிலிருந்து தப்பித்துக்கொண்டும்**

**இருப்பதற்கான முன்மாதிரியை உம்மத்திற்கு முன்னால் நிலைநாட்டுவதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆலோசனை கேட்டு வந்தார்கள்.**

நம்மிடையே ஷூராவின் அமைப்பு நடைமுறையில் இருப்பது அல்லாஹ் நம் மீது செய்த சிறப்பான அருளாகும். ஆகவே, ஒவ்வோர் அஹ்மதியும் பொதுவாகவும், ஒவ்வொரு ஷூராவின் உறுப்பினரும் குறிப்பாகவும் இதற்கு மதிப்பளித்தவாறு, அல்லாஹ் நமது நேர்வழிக்கான ஏற்பாட்டை உருவாக்கியுள்ளான் என்பதற்காக அவனுக்கு நன்றி செலுத்தக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்தெந்த சந்தர்ப்பங்களில் ஆலோசனை கேட்டார்கள் என்பதைக் குறித்தும் ஆலோசனை பெறுவதற்கு என்ன வழிமுறையை மேற்கொண்டார்கள் என்பதைக் குறித்தும் நமக்கு வரலாற்றிலிருந்து தெரிய வருகிறது. அவற்றிலிருந்து சிலவற்றை நான் எடுத்துரைக்கிறேன். இதே வழிமுறையைத்தான் குலஃபாயே ராஷிதீன் (நேர்வழி பெற்ற கலீஃபாக்கள்) என்பவர்களும் தொடர்ந்தார்கள். பிறகு, இக்காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் இதன்படியே செயல்பட்டார்கள்.

**பொதுவாக, ஆலோசனை பெறுவதற்கு மூன்று வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டதை நாம் காண்கிறோம். முதலாவது வழிமுறை** என்னவென்றால், ஆலோசனை கேட்டு பெறுவதற்குத் தகுந்தாற்போல் ஏதேனும் விவகாரம் இருக்கும்போது மக்கள் ஒன்று கூடுமாறு ஒருவர் அறிவிப்பு செய்வார். அப்போது

மக்கள் ஒன்று கூடுவார்கள். பிறகு, எடுத்துக் கூறப்படும் கருத்துகளுக்கு, ஆலோசனைகளுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோ அல்லது கலீஃபாக்களோ தீர்மானம் எடுப்பார்கள். அதாவது, இந்த ஆலோசனைகளுக்குப் பிறகு எமது தீர்மானம் இதுவாகும்; இவ்வாறு இது செயல்படுத்தப்படும் என்று கூறுவார்கள்.

அக்காலகட்டத்தில் தலைவர்களைக் கொண்ட அமைப்பு இருந்தது. ஆகவே பொதுவாக, கோத்திரங்களின் அதிகமான மக்கள் ஒன்று கூடினர் என்றாலும், தலைவரோ அல்லது அமீரோதான் கருத்து தெரிவிப்பார்கள். மக்களுக்கென்று ஒரு பிரதிநிதி இருந்தார். தம்முடைய தலைவர் அல்லது அமீர் தமது பிரதிநிதித்துவத்தில் கருத்து தெரிவிப்பதில் மக்கள் மகிழ்ச்சியுடன் திருப்தி கொண்டனர். இன்னும் கூறுவதாயின், அப்போதைய வழிமுறைக்கு எதிராக யாராவது எழுச்சி கொண்டு தனது கருத்தைக் கூறுவதற்கு முயற்சித்தாலும், நீர் உமது தலைவரிடமோ அல்லது அமீரிடமோ கூறி அவர் முன்வந்து தனது கருத்தைத் தெரிவிக்கட்டும். உமது கருத்துக்கு இவ்வாறு எந்த மதிப்பும் கிடையாது என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த நபரிடம் கூறி விடுவார்கள். ஆக, இது ஒரு வழிமுறையாக இருந்தது.

**இரண்டாவது வழிமுறை** என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எவர்களை ஆலோசனை கூறத் தகுதி உள்ளவர்களாகக் கருது-வார்களோ அவர்களை அழைத்துக் கொள்வார்கள். பொதுவாக அனைவரும் அழைக்கப்படுவதில்லை;

பிறகு, அந்த சில மக்களைக் கொண்ட சபையிடமிருந்து ஆலோசனை கேட்கப்படும்.

**மூன்றாவது வழிமுறை** என்னவென்றால், எப்போது இரு நபர்கூட ஒன்று சேரக்கூடாது என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கருதுவார்களோ, அப்போது தனித்தனி நபராக அழைத்து ஆலோசனை கேட்பார்கள். முதலில் ஒரு நபரை அழைத்து ஆலோசனை கேட்பார்கள். பிறகு, இன்னொரு நபரை அழைத்து ஆலோசனை கேட்கப்படும். (கிதாபாத்தே ஷூரா தொகுதி 1 பக்கம் 6-7 மஜ்லிஸே முஷாவரத் 1922 எனும் நூலில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது).

எவ்வாறிருப்பினும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆலோசனை கேட்பதற்கு இந்த மூன்று வழிமுறைகள் இருந்தன. நேர்வழி பெற்ற கலீஃபாக்களும் இதற்கு ஏற்பவே ஆலோசனை கேட்டார்கள்.

ஏற்கெனவே கூறியிருப்பது போன்று, அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் இவ்வாறான ஆலோசனைகளை கேட்பதை விட்டும் தன்னிறைவு பெற்றவர்களாவார்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஆனால், அவ்வாறிருந்தும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஆலோசனை கேட்டார்கள் என்பது வரலாற்றில் இருந்து நமக்குத் தெரிய வருகிறது. இன்னும் கூறுவதென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோ சஹாபிகளிடம் மிக அதிகமாக ஆலோசனை கேட்டு வந்தார்கள்.

அதன்படி, **ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட அதிகமாக ஒருவர் தம் தோழர்களிடம் ஆலோசனை கேட்கக் கூடியவராக நான் கண்டதில்லை என்று ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.** (திர்மிதி கிதாபுல் ஜிஹாத், பாபு மாஜாஅ ஃபில் மஷ்வரா, ஹதீஸ் எண் 1714)

இவை அனைத்தும் எதற்காக என்றால், நான் முன்பே கூறியது போன்று, அல்லாஹ்விடமிருந்து நேரடியாக வழிகாட்டல் கிடைக்கப் பெறும் அல்லாஹ்வின் நபி ஆலோசனை கேட்கிறார் என்றால், ஆலோசனையின் முக்கியத்துவத்தை எந்த அளவுக்குப் புரிவதற்கு நீங்கள் முயற்சி செய்ய வேண்டும்!

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆலோசனை கேட்ட ஒரு சம்பவத்தை நான் எடுத்துரைக்கிறேன். ஓர் அறிவிப்பில் வருவதாவது, ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னை ஏமன் நாட்டிற்கு அனுப்ப தீர்மானித்தபோது அன்னார் பல தோழர்களிடம் ஆலோசனை கேட்டார்கள். அந்த சஹாபிகளில், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் உமர் (ரலி), ஹஸ்ரத் உஸ்மான் (ரலி), ஹஸ்ரத் தல்ஹா (ரலி), ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) மற்றும் பல சஹாபிகள் இருந்தனர். ஹுஸூர் (ஸல்) அவர்கள் எங்களிடம் ஆலோசனை கேட்டிருக்காவிட்டால் நாங்கள் எந்த ஆலோசனையும் கூறி இருக்க மாட்டோம் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள். அதற்கு அன்னார், **எந்த விஷயங்களைக் குறித்து எனக்கு வஹீ**

**இறங்குவதில்லையோ அந்த விஷயங்களில் நான் உங்களைப் போன்றவனாகவே இருக்கிறேன் என்று கூறினார்கள்.**

ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: எனக்கு ஆலோசனை வழங்குங்கள் என்ற தமது கூற்றுக்கேற்ப, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆலோசனை பெற்றுக் கொண்டிருந்தபோது ஒவ்வொருவரும் தத்தமது ஆலோசனையைக் கூறினார். அதற்குப் பிறகு ஹுஸூர் (ஸல்) அவர்கள் என்னிடம், முஆஸே! உமது கருத்து என்ன என்று நீங்கள் கூறுங்கள் எனக் கேட்டார்கள். அப்போது நான், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறிய அதே கருத்துதான் எனது கருத்தும் ஆகும் என்று கூறினேன். (அல் முஃஜமுல் கபீரு லித் தபரானீ தொகுதி 20 பக்கம் 67 ஹதீஸ் எண் 124, தாரு இஹ்யாயித் துராசில் அரபி, பைரூத் பதிப்பு)

ஆக, ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்களிடமும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆலோசனை கேட்டார்கள். அன்னார் ஆலோசனை கேட்டது அன்னாருடைய எளிமை, தன்னடக்கம் மற்றும் ஆலோசனையின் முக்கியத்-துவத்தை வெளிப்படுத்துகின்ற அதேவேளையில், ஆலோசனைகளுக்கு நாம் எந்த அளவு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதில் நமக்கு இது அழகிய முன்மாதிரியாக உள்ளது. சஹாபிகளின் முன்மாதிரி நமக்குக் கூறுவது என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கட்டளைக்கிணங்க அவர்கள் ஆலோசனை கூறும்போது தம் திறன்கள்

மற்றும் அனுபவத்திற்கு ஏற்ப இறையச்சத்தின்படி நடந்தவாறு ஆலோசனை கூறி வந்தனர்.

பிறகு, மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்த பிறகும் கூட மக்கத்து காஃபிர்கள் முஸ்லிம்களின் அமைதி மற்றும் நிம்மதி ஆகியவற்றை சீர்குலைக்க முயற்சி செய்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதைத் தடுத்து நிறுத்துவதற்காக சஹாபிகளிடம் ஆலோசனை கேட்டார்கள். மேலும், அதில் அன்சார் தலைவர்களையும் இணைத்துக் கொண்டார்கள்; முஹாஜிர்களின் தலைவர்களையும் இணைத்துக் கொண்டார்கள். பிறகு, முஹாஜிர்கள் மற்றும் அன்சார் தலைவர்களின் ஆலோசனையாலும், விருப்பத்தினாலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்ர் களத்தை நோக்கிப் புறப்பட்டார்கள். அந்த ஆலோசனையின் போது அன்சார் தலைவர்கள் எந்தக் கலப்பற்ற தன்மையையும், நன்றியுணர்வையும் காட்டினார்களோ, உறுதிமொழி எடுத்தார்களோ அதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகுந்த மகிழ்ச்சியையும், நிம்மதியையும் கூட வெளிப்படுத்தி-னார்கள். (ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் M.A அவர்கள் எழுதிய ‘சீரத் காத்தமுன் நபிய்யீன் (ஸல்)’ என்ற நூலின் பக்கம் 354, 355 லிருந்து எடுக்கப்பட்டுள்ளது).

**ஆகவே, ஆலோசனை என்பது ஆலோசனை கூறுவதோடு நின்று விடுவதில்லை; மாறாக, ஆலோசனை கூறக்கூடியவர்களின் செயல், நடவடிக்கை மற்றும் அந்த ஆலோசனைகளில் எல்லாரையும் விட முதலில் தாம் செயல்படுவது ஆகியவற்றிற்கான உறுதிமொழி ஆகும்.**

செயல்படுவதற்கான உறுதிமொழி இல்லையென்றால், பிறகு உண்மையில் அதன்படி செயல் இல்லையென்றால், பிறகு ஆலோசனை பயனற்றதாகும். பிறகு, பத்ர் களத்தில் கலப்பற்ற தன்மையையும் நன்றி உணர்வையும் எவ்வாறு செயல் வடிவத்தில் அந்த சஹாபிகள் வெளிப்படுத்தினார்கள் என்பதை நாம் கண்டோம். (சஹாபிகள்) ஆலோசனை கொடுத்தார்கள் என்றால், பிறகு தம் உயிரை பணயமும் வைத்து விட்டார்கள்.

ஆகவே, **எங்கெல்லாம் நம்முடைய ஷூராவின் உறுப்பினர்கள் இருக்கிறார்களோ, அவர்கள் எங்கு ஆலோசனை கூறுகிறார்களோ, அந்த ஆலோசனை-களுக்கு ஒப்புதலுக்கான தீர்மானம் கிடைத்த பிறகு, அதன்படி நாம் செயல்பட வேண்டும்; அல்லது காலத்தின் கலீஃபா அவர்கள் என்ன தீர்மானம் எடுப்பார்களோ அதன்படி செயல்படுவதற்காக அனைவரையும் விட முதலில் நாம் எல்லாத் தியாகங்களையும் செய்வதற்காக முதல் நபராக நம்மைநாம் ஆயத்தம் செய்ய வேண்டும் என்பதை எப்போதும் அவர்கள் நினைவில் கொள்ள வேண்டும்.** நமது செயல் முன்மாதிரி நிலைபெறும்போது அதற்குப் பிறகுதான் ஜமாஅத்தின் மற்ற உறுப்பினர்களும் மகிழ்ச்சியுடன் அதன்படி செயலாற்றுவதற்காகவும் எல்லாவிதத் தியாகங்களுக்காகவும் தம்மைத்தாமே முன்னிறுத்துவார்கள்.

ஒவ்வோர் அஹ்மதியும் கிலாஃபத்தின் மீது நன்றியுணர்வு மற்றும் கட்டுப்படுதல் ஆகியவற்றிற்கான உறுதிமொழி எடுத்துள்ளார். ஆகவே, பொறுப்பாளர்-களும் ஷூராவின் உறுப்பினர்களும் இதற்காக

அனைவரையும் விட உயரிய முன்மாதிரியைக் காட்ட வேண்டும். ஏனென்றால், கிலாஃபத் அமைப்பிற்கும், ஜமாஅத் அமைப்பிற்கும் உதவி செய்யக்கூடிய ஆலோசனை சபையின் உறுப்பினராக நீங்கள் ஆக்கப்-பட்டுள்ளீர்கள். இதை ஷூராவின் உறுப்பினர்கள் எப்போதும் தம் முன்னால் வைக்க வேண்டும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நடைமுறைப்படி நடந்தவாறு மார்க்கத்தின் முக்கிய விவகாரங்களில் சமுதாயத்து மக்களிடம் ஆலோசனை கேட்க வேண்டும் என்றும், மென்மையான உள்ளம் கொண்டவராக இருக்க வேண்டும் என்றும், துஆவும் செய்ய வேண்டும் என்றும் காலத்தின் கலீஃபாவுக்குக் கட்டளை இருக்கின்ற அதே வேளையில், ஆலோசனை கேட்கப்படும் அந்த மக்களுக்கும் நல்லெண்ணம் கொண்டவாறு, இறையச்சத்தின்படி நடந்தவாறு ஆலோசனைகளைக் கூறுங்கள் என்ற கட்டளையும் இருக்கிறது என்பதை எப்பொழுதும் நினைவில் கொள்ளுங்கள்.

**ஆகவே, ஆலோசனை கொடுக்கக் கூடியவர்கள் அவர்களுடைய ஆலோசனைகள் நல்லெண்ணத்தின் அடிப்படையில் இறையச்சத்தின் உயரிய தரங்களுக்கு ஏற்ப இருக்க வேண்டும் என்ற விஷயத்தை எப்போதும் நினைவில் வைத்திருக்க வேண்டும்.** ஆகவே, இந்த வகையில் ஆலோசனை கூறக் கூடியவர்களுக்குத் தமது இறையச்சம் எந்த தரத்தைக் கொண்டுள்ளது என்று சீர்தூக்கிப் பார்க்க வேண்டிய மிகப் பெரிய பொறுப்பு உள்ளது.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் ஓர் அறிவிப்பு எந்த அளவுக்குத் தெளிவுபடுத்துகிறது என்றால், அன்னார் கூறுகிறார்கள்:

شَاوِرُوْا الْفُقَهَاءَ وَالْعَابِدِيْنَ

(கன்ஸுல் உம்மால் தொகுதி 3 பக்கம் 411 ஹதீஸ் எண் 7191, முஅஸ்ஸஸதுர்ரிஸாலா, பைரூத் பதிப்பு 1985)

'புரியும் திறன்கொண்ட, இறைவணக்கம் செய்யக்கூடிய மக்களிடம் ஆலோசனை கேளுங்கள்' என்றார்கள். ஒவ்வொருவரிடமும் கேட்க வேண்டியதில்லை. ஆக, இதுதான் பிரதிநிதிகளுக்கான தரமாகும். இதில் ஷூராவுக்கான பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் மக்களுக்கும் அறிவுரை உள்ளது. அது என்னவென்றால், **தங்களிலிருந்து வெளிப்படையான முறையில் ஆலோசனை கூறும் தகுதி பெற்றவர்களாகவும், மார்க்க அறிவில் சிறந்தவர்களாகவும், இறைவணக்கத்தின் தரத்தில் சிறந்தவர்களாகவும் இருக்கும் அத்தகையவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.**

எங்கெல்லாம் இந்தத்தரத்தை முன்னிறுத்தியவாறு பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்களோ அந்தப் பிரதிநிதிகளின் ஆலோசனைகளில் ஒரு தெளிவான வேறுபாடு தென்படுவதை நான் கண்டுள்ளேன். ஜமாஅத் நபர்கள் நல்லெண்ணம் கொண்டவாறு யாரையாவது ஷூராவின் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்திருக்கின்றனர் என்றால், அந்த நபர் அந்த நல்லெண்ணத்திற்கு ஏற்ப முழுமையாக செயல்பட வேண்டும் என்ற பொறுப்பு அந்தப் பிரதிநிதிகளுக்கும்

இருக்கிறது. ஒரு நாளிலோ அல்லது சில வாரங்களிலோ எவரும் ஞானத்தின் உயரிய தரத்தை அடைந்து விட முடியாது; மார்க்கத்தின் ஆழத்தை அறிந்துவிட முடியாது; அதைப் பெற்று விட முடியாது. ஆனால், இறையச்சத்தின்படி நடந்தவாறு எல்லாவிதத் தன்னலத்தையும் விட்டு மேம்பட்டு தம் கருத்தை ஒவ்வொருவராலும் கூற முடியும்தான்!

அவ்வாறே, **எங்கெல்லாம் ஷூரா நடக்கிறதோ அங்குள்ள உறுப்பினர்கள் அல்லாஹ்வின் முன் குனிந்தவாறு, அவனிடம் உதவி வேண்டியவாறு, துஆவுடன் தம் கருத்தை எடுத்து வைக்க வேண்டும்.** அவ்வாறல்லாமல், ஒரு சொற்பொழிவாளருடைய சொற்பொழிவின் தாக்கத்திற்குட்பட்டோ, ஏதேனும் தொடர்பின் காரணமாகவோ, நட்பைக் கருத்தில் கொண்டவாறோ பிறர் ஆலோசனையுடன் தம் ஆலோசனையைக் கலந்து விடவும் கூடாது; ஏதேனும் அச்சத்தின் காரணமாகவோ, ஒருவருக்கு மதிப்பளிக்க வேண்டும் என்பதன் காரணமாகவோ, தம் ஆலோசனையை மாற்றவும் கூடாது. மாறாக, **இறையச்சத்தை முன்னிறுத்தியவாறு, எல்லாவற்றையும் விட ஜமாஅத்தின் நலனுக்கு முன்னுரிமை வழங்கியவாறு ஆலோசனை கொடுக்கும் போதுதான் அவர்கள் உண்மையான முறையில் தமது பிரதிநிதித்துவத்தின் உரிமையை நிறைவேற்றக் கூடியவர்களாக ஆவார்கள்.**

அல்லாஹ் நம் உள்ளங்களின் நிலையையும் அறிகிறான். நமது ஒவ்வொரு செயலையும் பார்த்துக் கொண்டும் இருக்கிறான். அவனுடைய விருப்பத்தை முன்னிறுத்தியவாறு நான் பணியாற்றவில்லையெனில்

அல்லாஹ்வின் கோபத்திற்கு ஆளாகி விடுவேன் என்பதை எப்போதும் ஒவ்வொருவரும் நினைவில் வைத்திருக்க வேண்டும்.

அவ்வாறே, **எங்கெல்லாம் ஷூரா நடந்து முடிந்து விட்டதோ அங்கு ஷூராவின் உறுப்பினர்கள் தமது உரிமையை இப்பொழுது எவ்வாறு நிறைவேற்ற வேண்டும் என்றால், அவர்கள் தமது ஆன்மிக மற்றும் செயலின் நிலைமைகளை எப்போதும் கண்காணித்தவாறு தமது செயல் முன்மாதிரிகளைக் காட்டுவதற்கு உறுதிமொழி எடுக்க வேண்டும். எது தீர்மானிக்கப்படுமோ அல்லது என்ன தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளனவோ அவற்றை இறையச்சத்துடன் செயலாற்றவும், (மற்றவர்களை) செயல்படுத்த வைக்கவும் முயற்சி செய்ய வேண்டும்.**

நாம் இந்நிலையை உருவாக்கும் போதுதான் அல்லாஹ்வின் அருளை ஈர்க்கக் கூடியவர்களாகவும் ஆவோம். அப்போதுதான் நம் தீர்மானங்களில் அருளும் ஏற்படும். இல்லையென்றால், நாம் ஒன்று கூடுவது, நமது கருத்திற்காக அழுத்தமான சொற்பொழிவுகளை நிகழ்த்துவது ஆகியவை இறையச்சம் காணாமல் போய்விட்ட அந்த உலக சட்டசபைகளைப் போன்றதாக இருக்கும். அங்கு சிலநேரங்களில் நல்லொழுக்கத்தையும் சீரழிக்கக் கூடியவையாக இருக்கும் தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகின்றன. மேலும், (அவை) அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு எதிரானதாகவும் உள்ளன. அங்கு தனது கட்சியின் நோக்கங்கள் முன் வைக்கப்படுகின்றன. சில நேரங்களில் இவ்வாறான தவறான தீர்மானங்களின் விளைவுகள் விரைவிலேயே

வெளிப்பட்டு விடுகின்றன. அவை அமைதி, நிம்மதி ஆகியவற்றை நாசமாக்கக் கூடியவையாக இருக்கின்றன. சிலநேரங்களில் காலம் தாழ்த்தியும் விளைவுகள் வெளிப்படுகின்றன. ஆனால், அவற்றில் எவ்வித அருளும் இருப்பதில்லை. ஆனால் **எந்நிலையிலும், அல்லாஹ்வுடைய சட்டத்திற்கும், கட்டளைகளுக்கும் எதிராக இருக்கும் தீர்மானங்கள் இறுதியில் சமுதாயங்களின் நாசத்திற்கு காரணமாகின்றன.** ஆகவே, உலகவாதிகளின் நிலைகளைப் பார்த்தும் நாம் நமது நிலைகளை மேம்படுத்துவதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும்.

நான் கூறியது போன்று, ஷூராவுடைய உறுப்பினர்களின் ஆலோசனைகள் காலத்தின் கலீஃபாவிடம் எடுத்து வைக்கப்படுகின்றன. மேலும் காலத்தின் கலீஃபா கூறுவதால்தான் இந்த ஆலோசனைக் கூட்டமே கூட்டப்படுகின்றது.

எனவே, **மஜ்லிஸே ஷூரா என்பது கிலாஃபத்திற்கு உதவி செய்யும் அமைப்பு என்பதை எப்போதும் நினைவில் வைத்திருக்க வேண்டும்! இந்த வகையில் ஜமாஅத்தில் கிலாஃபத்திற்குப் பிறகு மஜ்லிஸே ஷூராவுக்கு அதிக முக்கியத்துவம் உள்ளது.** ஷூராவுக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வோர் உறுப்பினரும் ஒரு வருடத்திற்கான உறுப்பினராக இருக்கின்றார். அவர் தனது இந்த முக்கியத்துவத்தை எப்போதும் நினைவில் வைத்திருக்க வேண்டும்.

ஷூராவுடைய அஜெண்டா (பொருள் நிரல்) மற்றும் ஆலோசனைகள் ஆகியவற்றின் மூலமாகவே பல்வேறு நாடுகளில் உள்ள விவகாரங்கள் குறித்து

காலத்தின் கலீஃபாவுக்குத் தெரிய வருகிறது. பிறகு, வரக்கூடிய ஆலோசனைகள் மூலமாக அந்த விவகாரங்களுடைய தீர்வுக்கான செயல் திட்டமும் முன்னால் வந்து விடுகிறது. சில நேரங்களில் ஏதேனும் ஒரு விவகாரத்தின் தீர்வு குறித்து சில விஷயங்கள் முழு விபரத்துடன் கூறப்படுவதில்லை அல்லது ஷூராவின் உறுப்பினர்களுக்கு முன்னால் அவை வருவதேயில்லை. அப்போது கலீஃபாக்கள் அந்த விஷயங்களையும் செயல்திட்டத்தில் இணைத்து விடுகின்றனர். நானும் சில இடங்களில் இதே வழிமுறையைத்தான் மேற்கொள்கின்றேன்.

**ஷூராவிற்கு ஒரு சிறப்பான முக்கியத்துவம் இருக்கிறது என்பதைப் பற்றிய முழுமையான புரிதல் ஷூராவின் ஒவ்வோர் உறுப்பினருக்கும் இருக்க வேண்டும். இந்த முக்கியத்துவம் மூன்று நாட்களுக்காக மட்டுமல்ல; மாறாக, முழு வருடத்திற்கும் உரியதாகும். என்ன செயல் திட்டம் உருவாகிறதோ அதன்படி செயல்பட வைப்பதிலும், நிர்வாகத்திற்கு அதன்படி செயல்படுவதற்காக முழுமையான ஒத்துழைப்பு வழங்குவதற்கும் ஷூராவின் ஒவ்வோர் உறுப்பினரும் முயற்சி செய்ய வேண்டும். இது அவரது பொறுப்பாகும்.** இது நடக்கும்போதுதான் ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்கான திட்டங்கள் சரியான வழிகளில் விரைவாக நடைபெறும். மேலும், அவற்றின்படி மிக அழகிய முறையில் செயலாற்ற முடியும். மேலும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கின்ற நேர்வழியைக் கொண்ட கொள்கையைப் பரப்பும் பணியில் நாம் ஒத்துழைப்பவர்களாகவும், உதவியாளர்களாகவும் ஆக

முடியும்! இவை இல்லையென்றால், ஷூராவின் உறுப்பினராக இருப்பது பயனற்றதாகும்.

இங்கு இன்னொன்றையும் நான் கூறிக் கொள்கின்றேன். அது என்னவென்றால், உலகின் ஒவ்வொரு நாட்டிலும் நடைபெறும் ஆலோசனைக் கூட்டம் பொதுவாக அங்குள்ள அமீரின் தலைமையில் நடக்கின்றது. சிலநேரங்களில் ஆலோசனை கூறக் கூடியவர்கள் உணர்ச்சி மிகுதியில் பேசும்போது ஷூராவின் கண்ணியத்திற்கு எதிரானதாக இருக்கின்ற சொற்களைப் பயன்படுத்தி விடுகின்றனர்.

ஆக, முதல் விஷயம், **உறுப்பினர்கள் எப்போது தமது கருத்தை எடுத்துரைத்தாலும் எழுச்சியான சொற்பொழிவைக் காட்டுவதற்குப் பகரமாக, தம் நிலை மறந்து சொற்பொழிவாற்றுவதற்குப் பகரமாக, உணர்ச்சிப்பூர்வமாக சொற்பொழிவை எடுத்து-ரைப்பதற்குப் பகரமாக, பொருத்தமான சொற்களில் தம்முடைய கருத்துகளை எடுத்து வைக்க வேண்டும்.** சிலநேரங்களில் ஆலோசனையைக் கூறுபவர் எவ்வாறான விஷயங்களைப் பேசி விடுகிறார் என்றால் அதன் காரணமாக செயற்குழு உறுப்பினர்களோ அல்லது யாருடைய தலைமையில் ஷூரா நடக்கிறதோ அந்த ஜமாஅத் அமீரோ, கருத்து தெரிவித்த நபரைக் குறித்து இவர் மறைமுகமாகவோ அல்லது நேரடியாகவோ நமக்கு எதிராகப் பேசுகிறார் என்று கருதி விடுகிறார். பிறகு, அவைத் தலைவர் என்ற முறையில் கருத்து கூறும் அந்நபரை கடும் சொற்களுடன் தடுத்து நிறுத்துகிறார் அல்லது கண்டிக்கிறார். ஆகவே, அமீர்மார்களும் பரந்த மனப்பான்மையைக் காட்ட வேண்டும்; அவர் எதைக்

கூறுகிறாரோ அதை ஜமாஅத்துடைய நலனுக்காகவும் வேதனையுடனும் கருத்து தெரிவிக்கிறார் என நல்லெண்ணம் கொள்ள வேண்டும். **அவர் கடுமையான சொற்களைப் பயன்படுத்தியிருக்கிறார் என்றால் அல்லது ஷூராவின் கண்ணியத்திற்கு எதிரான சொற்களைப் பயன்படுத்தியிருக்கிறார் என்றால், மென்மையுடன் அவரைக் கண்டியுங்கள். அவைத் தலைவர் அவ்விஷயத்தைத் தனது சுயமரியாதைக் குறித்த விஷயமாக எடுத்துக் கொண்டாரோ என்று சந்தேகப்படும் அளவுக்கு நடந்து கொள்ளாதீர்கள்.**

குறிப்பாக பட்ஜெட் விவகாரம் தொடர்பாக விவாதிக்கும்போது அதிக உணர்ச்சிமிகுதி வெளிப்பட்டு விடுகின்றது. சில முன்னெச்சரிக்கைகளும் வெளிப்படுத்தப்படுகின்றன. இவ்வாறான நிலைமை-களிலும் சம்பந்தப்பட்ட செயலாளர், பொருளாளர், அவைத்தலைவர் ஆகியோர் சகிப்புத்தன்மையுடன் விஷயத்தைக் கேட்டு அதற்கான பதிலைக் கூற வேண்டும். எவ்விதமான பட்ஜெட் உருவாகி இருக்கிறது; வருமானம் எந்த அளவுக்கு உள்ளது; அதன் செலவினங்கள் எவ்வாறு இருக்கின்றன. எவ்வாறு அது நியாயப்படுத்தப்படுகின்றது என்று அந்நபருக்கு திருப்தி அளிக்கும் வகையில் பதிலளிக்க வேண்டும். (கருத்து) கூறக்கூடிய நபரோ ஜமாஅத் நலனை முன்னிறுத்தியவாறு தன் சார்பாக கருத்தைத் தெரிவிக்கிறார். எனவே தப்பெண்ணம் இருக்கக்கூடாது.

இதே போன்று அஜெண்டாவின் (பொருள் நிரலின்) பிற ஆலோசனைகள் உள்ளன. அதில் **சில நேரங்களில் நிர்வாகமும், பிரதிநிதிகளும் தேவையில்லாத விவாதத்தில் சிக்கி விடுகின்றனர்**

**அல்லது முற்றிலும் மவுனமாகி நிர்வாகத்தைப் பற்றிய அச்சம் இருப்பது போன்று இருந்து விடுகின்றனர். இவ்வாறான மக்களும் தமது அமானிதத்தின் உரிமையை நிறைவேற்றுவதில்லை.**

ஆகவே, பிரதிநிதிகள் பிரதிநிதித்துவம் மற்றும் அமானிதத்திற்கான உரிமையை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காகத்தான் மக்கள் அவர்களைத் தேர்ந்தெடுத்திருக்கின்றனர் என்பதை எப்போதும் நினைவில் வைத்திருங்கள். எனவே, தனிப்பட்ட தொடர்புகள் பற்றிய பேச்சுக்கே இங்கு இடமும் இல்லை; எவ்வித அச்சமும் இங்கு இருக்கக்கூடாது.

تُؤَدُّوا الْاَمٰنٰتِ اِلٰى اَهْلِهَا

(திருக்குர்ஆன் 4:59)

அதாவது, 'அமானிதங்களை அவற்றிற்குத் தகுதியானவர்களிடம் ஒப்படைக்க வேண்டும்' என்ற அல்லாஹ்வின் இக்கட்டளைக்கிணங்க மக்கள் நம்மைத் தேர்ந்தெடுத்துள்ளார்கள் என்பதை எப்பொழுதும் புரிந்து கொள்ளுங்கள். மக்கள் நல்லெண்ணத்துடன் அல்லாஹ்வின் இக்கட்டளைக்கேற்ப தம் பிரதிநிதியைத் தேர்ந்தெடுத்திருகின்றார்கள் என்றால், அதற்கேற்பவே அவர்கள் தமது அமானிதங்களுக்கான உரிமையை நிறைவேற்றுகிறார்கள் என்றே காலத்தின் கலீஃபாவும் கருதுகின்றார். பிரதிநிதிகள் ஷூராவிற்கான தமது இந்த உரிமையை ஷூராவின் போதும் அதற்குப் பிறகும் நிறைவேற்றவில்லை என்றால் அவர்கள் ஜமாஅத் மக்களின் நம்பிக்கையைக் காயப்படுத்துவது மட்டுமின்றி, தம் அமானிதத்தின் உரிமையை

செலுத்தாமல் காலத்தின் கலீஃபாவிடமும் நம்பிக்கைத் துரோகம் செய்யக்கூடியவர்களாக ஆகிவிடுகின்றனர்.

**இங்கு இன்னொரு நிலையும் உருவாக வாய்ப்புள்ளது. அது என்னவென்றால், (ஷூராவிற்கான) பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பவர்கள் சிலர் இறையச்சத்தின்படி நடந்து கொள்ளாமல் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்திருக்கலாம். உறவு முறையின் காரணமாகவோ அல்லது நட்பைக் கருத்தில் கொண்டோ தேர்ந்தெடுத்திருக்கலாம்.** எவ்வாறிருப்பினும், அந்தத் தேர்ந்தெடுப்பவர்களோ இந்தத் தவறான செயலை செய்துள்ளனர் என்ற வகையில், அவர்கள் தமது இச்செயலால் பாவிகளாக ஆகி விடுகின்றனர். அவர்கள் இந்த உரிமையை நிறைவேற்றவில்லை என்றால் அதற்காக அவர்கள் பாவமன்னிப்புக் கோர வேண்டும்.

ஆனால், பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு விடும்போது - நான் இதில் பொறுப்பாளர்களையும் சேர்த்துக் கொள்கிறேன் - எந்தத் தரத்திலான செயல் நடவடிக்கையும் ஆன்மிக நிலையும் அவர்களிடத்தில் இருக்க வேண்டுமோ அந்தத் தரத்தில் அவை அவர்களிடம் இருக்கவில்லையென்றால், இப்போது அவர்கள் பாவமன்னிப்புக் கோரியவாறு, தம் நிலைகளில் நேர்மறையான மாற்றத்திற்கு உறுதிமொழி எடுத்தவாறு, இறையச்சத்தின்படி நடப்பதற்கு முழுமையாக முயற்சி செய்தவாறு, அமானிதத்தின் உரிமையை செலுத்துவதற்குத் தகுதியுடையவர்களாகத் தம்மை மாற்றிக் கொள்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். இந்த முயற்சி ஏற்படும்போது அவர்கள் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுகின்ற அதே

வேளையில், ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் கொள்கைப் பரப்புப் பணியிலும் உதவியாளர்களாக ஆகி விடுவார்கள். மேலும், தமது செயல் மற்றும் ஆன்மிக நிலைகளையும் மேம்படுத்தக் கூடியவர்களாக ஆகிவிடுவார்கள்.

நான் கூறியது போன்று, **இந்தப் பிரதிநிதித்துவம் ஒரு வருடத்திற்கானது ஆகும். இக்காலகட்டத்தில் நிர்வாகத்துடன் ஒத்துழைப்பும் வழங்க வேண்டும்; ஒப்புதல் வழங்கப்பட்ட தீர்மானங்கள்படி தாமும் செயல்பட வேண்டும்; (மற்றவர்களையும்) செயல்பட வைக்க வேண்டும். இவ்விஷயங்களைப் பெறுவதற்காக உங்கள் ஜமாஅத்தில் இதற்கேற்ப செயல் நடைபெறுகின்றதா, இல்லையா? அல்லது எந்த அளவுக்கு நடைமுறைப்படுத்தப்படுகின்றது? காலத்தின் கலீஃபா வழங்கியிருந்த தீர்மானத்திற்கேற்ப செயல் நடைபெறுகின்றதா என்பதை எப்போதும் கண்காணித்துக் கொண்டிருங்கள்.** ஆகவே, இவ்வாறு நீங்கள் காலத்தின் கலீஃபாவின் உதவியாளர்களாக ஆக வேண்டும்.

தீர்மானங்கள் ஜமாஅத்துகளில் சென்று பொறுப்பாளர்களின் சோம்பேறித்தனங்களுக்கு இரையாகி விடுவதையும், எடுக்கப்பட்ட தீர்மானங்கள்படி செயல்படுத்தப்படாமல் இருப்பதையும் சில நேரத்தில் காண்கிறோம். ஆகவே, இவ்வாறான நிலையில் பிரதிநிதிகளின் வேலை என்னவென்றால், ஜமாஅத்தினர்களுக்கு மட்டும் கவனமூட்டாமல் பொறுப்பாளர்களுக்கும் அவர்களின் பொறுப்புகளின் பக்கம் கவனமூட்ட வேண்டும். அவ்வாறிருந்தும் கவனம் உருவாகவில்லை என்றால், அந்த

ஆலோசனையின்படி செயல்படுத்தப்பட வேண்டிய அளவுக்கு செயல்படுத்தப்படவில்லை என்றால், பிறகு தலைமையகத்திற்கு எழுதுங்கள். அதேபோன்று, பல பொறுப்பாளர்களும் ஷூராவின் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அவர்கள் தம் துறை சம்பந்தப்பட்ட வேலைகளைப் பார்ப்பது மட்டும் அவர்களின் வேலையல்ல; மாறாக, ஷூராவின் ஆலோசனைகளைக் குறித்தும் காலத்தின் கலீஃபா அவர்கள் அதற்குத் தீர்மானம் வழங்கியது குறித்தும், அவை செயல்படுத்தப்படாமல், நடைமுறைப்படுத்தாமல் இருப்பது குறித்தும் அவர்கள் அக்கறையுடன் சிந்திக்க வேண்டும். அது அந்தப் பொறுப்பாளரின் துறையாக இருந்தாலும் அல்லது வேறு ஒருவரின் துறையாக இருந்தாலும் சம்பந்தப்பட்ட பொறுப்பாளருக்கும், அமீருக்கும் அவர் கவனமூட்ட வேண்டும். மேலும், செயற்குழுவிலும் இவ்விவகாரத்தை எடுத்து வைக்க வேண்டும். இல்லையென்றால், அவ்வாறான பொறுப்பாளரும், அவ்வாறான பிரதிநிதியும் தமது அமானிதத்தின் உரிமையை நிறைவேற்றாதவர்களாகவே இருப்பார்கள்.

இவ்வுலகிலோ சில சாக்குப்போக்குகளைக் கூறி தப்பித்து விடுவார்கள். ஆனால், அல்லாஹ்விடம் எந்த விஷயமும் மறைந்திருக்கவில்லை என்பதை நினைவில் வைக்க வேண்டும். அமானிதங்களை நிறைவேற்றியது பற்றி அவன் விசாரிப்பான். ஆகவே, மிகவும் சிந்திக்க வேண்டிய இடமாகும்.

நாம் ஷூராவின் பிரதிநிதிகள் ஆவோம் என்றோ அல்லது பொறுப்பாளர்கள் ஆவோம் என்றோ பெருமைப்பட்டுக் கொள்ளக்கூடாது. மாறாக,

ஒவ்வொருவரும் தம் பொறுப்பைப் பற்றி சிந்திக்க வேண்டும்.

நான் கூறியது போன்று, ஜமாஅத்துகளில் பொறுப்பாளர்களுக்கு கவனமூட்டிய பிறகும்கூட ஷூராவின் தீர்மானங்களின்படி செயல் நடைபெறுவதில்லை என்றால், அதாவது, பிரதிநிதிகள் அதற்காக முயற்சி செய்தும், கவனமூட்டிய பிறகும் அவர்கள் செயல்படவில்லை என்றால், அவர்கள் தலைமையகத்திற்குத் தகவல் தெரிவியுங்கள். சிலர் இதன்படி தற்போதும் செயல்படுகின்றனர்தான்; செயல்படுவதே இல்லை என்பதல்ல. சிலர் அமல் செய்கிறார்கள்தான். பொறுப்பாளர்கள் அதற்கேற்ப செயல்படவில்லை என்றால், அந்தப் பிரதிநிதிகள் தலைமையகத்திற்குத் தகவல் கூறுகின்றனர். ஆனால், பொதுவாக ஒரு பொறுப்பாளருடன் தனிப்பட்ட முறையில் விரோதம் ஏற்பட்டு கருத்து வேறுபாடு தோன்றும்போது அந்த நேரத்தில் இந்த விஷயத்தைக் கூறுகின்றனர். இது இறையச்சத்தின் வழிமுறை கிடையாது!

இறையச்சத்தின்படி செயல்பட்டவாறு ஒவ்வொரு பிரதிநிதியும், ஒவ்வொரு பொறுப்பாளரும் ஷூராவின் ஒப்புதல் வழங்கப்பட்ட ஆலோசனைகள்படி செயல்படவும், செயல்பட வைக்கவும் முயற்சி செய்தால், அந்த ஆலோசனை அடுத்த வருடமோ அல்லது இரண்டு மூன்று வருடங்களுக்குப் பிறகோ மீண்டும் ஷூராவில் எடுத்து வைக்கப்படும் நிலையே ஒருபோதும் உருவாகாது. **அந்த ஆலோசனை மீண்டும் எடுத்து வைக்கப்படுகிறது என்றால் அதன் பொருள், அதன்படி முழுமையான முறையில் செயல்படவில்லை**

**அல்லது எந்த அளவுக்கு செயல்பட்டிருக்க வேண்டுமோ அந்த அளவுக்கு செயல்படவில்லை என்பதேயாகும்.**

ஆகவே, அவ்வாறான ஜமாஅத்துகளும், பொறுப்பாளர்களும் இது இறையச்சத்தின்படி நடக்கின்ற, தமது அமானிதங்களுக்கான உரிமையை நிறைவேற்றும் செயலா? இது கிலாஃபத்திற்குக் கட்டுப்படுகின்ற, நன்றி உணர்வை நிறைவேற்றும் உறுதிமொழியை முழுமை செய்யும் செயலா என சிந்திக்க வேண்டும்.

அந்த ஆலோசனைகள் படி செயல்படுவதில்லை என்பதை ஒரு நாட்டில் உள்ள ஜமாஅத்துகள் பார்க்கும்போதுதான் தம் தலைமையகத்திற்கும் அப்படிப்பட்ட ஆலோசனைகளை அனுப்பி வைக்கின்றன. செயல் நடைபெற்று வருகிறது என்றால், எல்லா மட்டத்திலும் இந்தப் பணி எந்த அளவுக்கு நடைபெறுகிறது என்பது தொடர்பாக ஒவ்வொரு ஜமாஅத்தும் கண்காணிக்கப்படுகிறது என்றால், அந்த ஆலோசனைகள் மீண்டும் வரவே செய்யாது. இந்த ஆலோசனை ஒரு வருடத்திற்கு முன்பு அல்லது இரு வருடத்திற்கு முன்பு எடுத்து வைக்கப்பட்டு விட்டது; ஆகவே, இதை ஷூராவில் எடுத்து வைக்க பரிந்துரைக்கப்படவில்லை என்ற பரிந்துரையுடன் நாட்டின் தலைமையகங்கள் அந்த ஆலோசனைகளைக் காலத்தின் கலீஃபாவிடம் அனுப்ப வேண்டிய தேவையும் ஏற்பட்டிருக்காது.

இந்தப் பதிலை எழுதும்போது, நாட்டின் தலைமையக அமைப்பு நாங்கள் இதன்படி

செயல்படவைக்க இயலவில்லை என்பதில் நாங்கள் வெட்கப்படுகிறோம். இவ்வருடம் நாங்கள் இதன்படி செயல்படுவோம். செயல்பட வைக்க முடியவில்லை என்றால், நாங்கள் குற்றவாளிகள் ஆவோம்; தமது அமானிதங்களின் உரிமையை நிறைவேற்றாத மக்களைச் சேர்ந்தவர்களாவோம் என்று வருத்தத்தை வெளிப்படுத்தியவாறு எழுத வேண்டும்.

ஆகவே, இந்த வாக்குமூலத்தை அவர்கள் எழுத வேண்டும். எனவே நாங்கள் மிகவும் பணிவுடன் மன்னிப்பு கேட்டவாறு இந்த ஆலோசனையை இந்த வருடம் எடுத்து வைக்காதிருக்க பரிந்துரைக்கின்றோம் என்றும் எழுதுங்கள். இவ்வாறு செய்யும் போது பொறுப்புகளைப் பற்றிய உணர்வு ஏற்படும். நாங்கள் இதை செய்து விடுவோம்; அதை செய்து விடுவோம் எனப் பெரும் பெரும் செயல் திட்டங்களை வகுத்து நாம் காலத்தின் கலீஃபாவுக்கு முன்னால் எடுத்து வைக்கின்றோம். பிறகு, அதற்கு ஏற்ப செயல்படுவதில்லை என்பதால் குற்றவாளிகள் ஆகின்றோம். காலத்தின் கலீஃபா அவர்களின் நம்பிக்கையைப் புண்படுத்தியவர்களாக இருக்கிறோம் என்ற உணர்வாவது குறைந்தபட்சம் இதிலிருந்து நிர்வாகத்திற்கும் பிரதிநிதிகளுக்கும் ஏற்படும்.

ஆகவே, இவ்வகையில் ஒட்டுமொத்த அளவில் கணக்கிடும் அதே வேளையில், தனிப்பட்ட முறையிலும் பொறுப்பாளர்கள் மற்றும் ஷூராவின் பிரதிநிதிகள் ஆகியோர் தம்மை கணக்கிட்டுப் பார்ப்பார்கள்; பாவமன்னிப்புக் கோருவார்கள். பிறகு, அதன்படி செயல்படாமல் போனதற்கான

காரணங்களையும் எல்லா மட்டத்திலும் அறிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும்.

ஆகவே, இந்த ஆய்வுப் பணிகள்தான் ஜமாஅத் அமைப்பை சரியான வழிகளில் நடத்த முடியும். இல்லையென்றால், வாய்ப்பேச்சுகள் எவ்வித பயனையும் தர முடியாது. சில சுறுசுறுப்பான ஜமாஅத்துகள் நூறு சதவீதம் இல்லையென்றாலும் 70, 80 சதவீதம் ஷூராவின் ஆலோசனைகளின்படி செயல்பட்டு விடுகின்றன. காலத்தின் கலீஃபாவின் ஒப்புதலுடன் இந்த செயல்திட்டம் நமக்குக் கிடைத்துள்ளது. நாம் காலத்தின் கலீஃபாவின் நம்பிக்கையைப் புண்படுத்தி விடக்கூடாது என்ற ஓர் ஈடுபாட்டுடன் செயல்படுகின்றன. அவர்களிடம் இருக்கும் அந்த ஆர்வம் என்ன? எந்த ஆர்வத்தின் அடிப்படையில் அந்த ஜமாஅத் மக்களிடம் இந்தப் புரட்சி இருக்கிறது என்பதை அறிய வேண்டும். இவ்வகையிலும் நாடுகளுக்குள் ஆய்வு மேற்கொள்ள வேண்டிய தேவை உள்ளது.

இவ்வாறு நன்கு செயலாற்றும் ஜமாஅத்துகளின் பொறுப்பாளர்களை பலவீனமான ஜமாஅத்துகளின் பொறுப்பாளர்களுடன் கூட்டம் நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும். இன்னும் கூறுவதென்றால், தலைமையக பொறுப்பாளர்களுடனும் கூட்டம் நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும். அவ்வாறு துடிப்புடன் பணியாற்றும் அந்தப் பொறுப்பாளர்களின் அனுபவங்களில் இருந்து பயன்பெற வேண்டும். **ஓரிடத்தில் ஒரு ஜமாஅத் இவ்வாறு நன்கு செயல்படக் கூடியதாகவும், செயல் அளவிலான, ஆன்மிக அளவிலான தன்னுடைய நிகழ்ச்சிகளில் முழுமையாக செயல்படக் கூடியதாகவும்**

**இருக்கிறது என்றால், அது மற்ற பத்து ஜமாஅத்துகளுக்குத் தன்னுடைய வழிமுறைகளைப் பகிர்ந்து அவற்றிற்குப் பயனளிக்க முடியும்.** ஆனால், விஷயம் என்னவென்றால், தலைமையக அமைப்பில் ஒவ்வொரு செயலாளரும், பொறுப்பாளரும், ஷூராவின் பிரதிநிதிகளும் ஈமானுடன் தம் பங்களிப்பை வழங்குபவர்களாக இருந்தால்தான் இது நடக்கும்.

சில ஜமாஅத்துகள் அல்லது சில நாடுகள் இவ்வகையிலும் ஆய்வுகள் மேற்கொண்டுள்ளன. அதற்குப் பயனும் கிடைத்துள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் எடுக்கப்பட்ட ஷூராவின் தீர்மானங்களைக் குறித்து அவை எந்த அளவுக்கு செயல்படுத்தப்பட்டுள்ளன என்றும், செயல்-படுத்தப்பட்டு வருகின்றன என்றும் ஆய்வு மேற்கொண்டு, பிறகு தலைமையகத்திற்கு மும்மாத ஆய்வு அறிக்கையை அனுப்புகின்றன. இந்த ஆலோசனை இரு வருடங்களுக்கு முன் எடுத்து வைக்கப்பட்டு விட்டது. ஆகவே (மீண்டும்) எடுத்து வைக்கப்பட முடியாது என்று கூறி நாம் இருந்து விடக்கூடாது. மாறாக, நாங்கள் இந்த செயல் திட்டத்திற்கு ஏற்ப செயல்பட்டு இந்த அளவுக்கு எங்கள் இலக்கை அடைந்து விட்டோம்; முயற்சி இன்னும் தொடர்கின்றது என்று தலைமையகத்திற்கு அறிக்கை அனுப்ப வேண்டும் என்ற உணர்வு அவர்களிடம் காணப்படுகின்றது. பிறகு, இவ்வாறான ஜமாஅத்துகளில் இதன் மூலமாக பொறுப்புணர்வு அதிகரித்துள்ளது.

பேச்சுகளால் மட்டுமே நாம் உலகை வெற்றி கொள்ள முடியாது. அதற்கு செயலுக்கான தேவை உள்ளது. **உறுதியான செயல் திட்டங்கள் தேவைப்படுகின்ற இடங்களில் செயல் அளவிலான முயற்சியின் தேவை இருக்கிறது; தமது இறைவணக்கங்களுக்குரிய தரத்தைப் பெறுவதற்கான தேவை இருக்கிறது.** பொறுப்பாளர்களும், ஷூராவின் பிரதிநிதிகளும் தம் இறைவணக்கங்களின் தரங்களை மேம்படுத்துவதன் பக்கம் கவனம் செலுத்துவார்கள் என்றால், பள்ளிவாசல்களை நிரப்புவதற்காகத் தம் செயல் முன்மாதிரிகளை நிலைநாட்டுவார்கள் என்றால், பள்ளிவாசலுக்கு வருவோரின் எண்ணிக்கையும் மூன்று, நான்கு மடங்காக அதிகரித்திட முடியும். நாம் இவ்வகையிலும் ஆய்வு செய்து பார்க்க வேண்டும்.

ஆகவே, **நமது செயல் முன்மாதிரிகள், மக்களுடன் அன்பு நேசத்துடன் தொடர்பு வைத்தல், அவர்களின் வேதனைகளை உளப்பூர்வமாக உணர்தல், அவர்களுக்காகவும் தமக்காகவும் துஆ செய்தல், காலத்தின் கலீஃபாவுக்குக் கட்டுப்படும் தரத்தை மேலோங்கச் செய்தல் ஆகியவை ஒவ்வொரு பொறுப்பாளரின், ஷூராவின் ஒவ்வொரு பிரதிநிதியின் சிறப்பான தனித்தன்மை ஆகும்போதுதான் ஒரு புரட்சிகரமான மாற்றம் ஒட்டு மொத்த அளவிலும் ஜமாஅத்தில் ஏற்படுவதை நாம் காண்போம்.**

ஒரு மாபெரும் பணி நம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுடைய வருகையின் நோக்கமும் அன்னாருடைய கொள்கையைப் பரப்பும் பணியும் ஒரு சாதாரண வேலை அல்ல. உலகிற்கு இஸ்லாத்தின்

அழகிய தூதுச் செய்தியை எட்ட வைத்து உலகத்தை ஏக இறைவனை வணங்கக் கூடியதாக ஆக்குவதற்குத் தொடர்ச்சியான முயற்சி செய்ய வேண்டிய தேவை உள்ளது. **உலகில் அனைத்து நாடுகளிலும் இதற்காகத்தான் ஷூராக்கள் நடத்தப்படுகின்றன. அதாவது, நாம் நம் செயல் நிலைகளை சீர்படுத்துவதற்காக செயல் திட்டங்களை வகுக்கின்ற அதேவேளையில், ஏக இறைவனுடைய தூதுச் செய்தியைக் கொண்டு சேர்ப்பதற்காக உலகை ஒரே சமுதாயமாக ஆக்குவதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கொடியின் கீழ் கொண்டு வருவதற்காக ஒரு புரட்சியை ஏற்படுத்தி விடக் கூடிய செயல்திட்டங்களை வகுக்க வேண்டும்.**

இவ்வனைத்துத் திட்டங்களை நிறைவேற்ற செலவீனங்கள் உள்ளன; பணத்தின் தேவையும் உள்ளது என்பதையும் எப்போதும் நினைவில் வைத்திருங்கள். ஆகவே, உங்களுடைய சந்தா பட்ஜெட்டை எவ்வாறு வடிவமைக்க வேண்டும் என்றால், குறைந்த செலவில் நாம் அதிக பயனைப் பெறக்கூடியதாக அது இருக்க வேண்டும். ஜமாஅத் மக்களுடைய எண்ணிக்கையில் பெரும்பாலார் ஏழைகளாகவும், நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாகவும் உள்ளனர். ஆகவே, நம்முடைய சந்தாக்களின் வருவாய் தொகையை, மிகக்குறைவிலும் குறைவான செலவில் அதிகத்திலும் அதிகமான அளவில் மார்க்கத்தைப் பரப்புவது, தப்லீக் பணியை செய்வது போன்றவற்றில் மிக அழகிய முறையில் சிறப்பாக திட்டமிட வேண்டும்.

நாம் இறையச்சத்தில் அடியெடுத்து வைத்தவாறு நம் பொறுப்புகளையும், அமானிதங்களையும்

நிறைவேற்ற வேண்டும்; **மார்க்கத் தொண்டை ஓர் இறை அருளாக கருத வேண்டும் என்ற உண்மையை நாம் புரியக் கூடியவர்களாகி விடும்போது அந்த நிலையில்தான் நாம் இந்தப் பணிகளை செய்ய முடியும்.** இறையச்சத்தின் படி நடக்குமாறு அறிவுறுத்தியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகிறார்கள்:

يَاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْٓا اِنْ تَتَّقُوا اللّٰهَ يَجْعَلْ لَّكُمْ فُرْقَانًا وَّيُكَفِّرْ عَنْكُمْ سَيِّاٰتِكُمْ

(திருக்குர்ஆன் 8:30)

இன்னோரிடத்தில் அல்லாஹ் கூறுகின்றான்:

وَيَجْعَلْ لَّكُمْ نُوْرًا تَمْشُوْنَ بِهٖ

(திருக்குர்ஆன் 57:29)

அதாவது, நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் இறையச்சமுடையவர்களாக இருப்பதில் நிலைத்து நின்றால், அல்லாஹ்வுக்காக இறையச்சம் எனும் பண்பில் நிலைத்து நின்றால், உறுதிப்பாட்டை மேற்கொண்டால், இறைவன் உங்களுக்கும் மற்றவர்களுக்கும் இடையில் வித்தியாசத்தை ஏற்படுத்தி விடுவான். அந்த வித்தியாசம் என்னவென்றால், உங்களுக்கு ஓர் ஒளி வழங்கப்படும். அந்த ஒளியுடன் நீங்கள் உங்களது அனைத்து வழிகளிலும் செல்வீர்கள். அதாவது, அந்த ஒளி உங்களது அனைத்து செயல்களிலும், சொற்களிலும், ஆற்றல்களிலும், புலன்களிலும் வந்துவிடும். உங்களது அறிவிலும் ஒளி இருக்கும்; உங்களுடைய ஓர் அனுமானமான விஷயத்திலும் ஒளி இருக்கும்; உங்களுடைய கண்களிலும் ஒளி இருக்கும்; உங்களுடைய காதுகள், உங்களுடைய நாவுகள்,

உங்களுடைய கூற்றுகள், உங்களுடைய ஒவ்வோர் அசைவிலும், அசைவின்மையிலும் ஒளி இருக்கும். நீங்கள் எந்தப் பாதைகளில் செல்வீர்களோ அவை ஒளியைக் கொண்டவையாகி விடும். சுருக்கமாக, உங்களுடைய வழிகள், உங்களுடைய ஆற்றல்களின் வழிகள், உங்களுடைய புலன்களின் வழிகள் எத்தனை இருக்கின்றனவோ அவை அனைத்தும் ஒளியால் நிரம்பி விடும். மேலும், நீங்கள் தலை முதல் பாதம் வரை ஒளியிலேயே செல்வீர்கள். (ஆயினயே கமாலாத்தே இஸ்லாம், ரூஹானீ கஸாயின் தொகுதி 5 பக்கம் 177-178)

இறையச்சத்தில் நடந்தவாறு, நம் பொறுப்பகளை நிறைவேற்றக்கூடிய நல்வாய்ப்பை அல்லாஹ் நம் அனைவருக்கும் வழங்குவானாக. அல்லாஹ் நம்முடைய தவறுகள், குறைபாடுகள், பலவீனங்கள் ஆகியவற்றை மறைத்தவாறு எப்பொழுதும் நமக்குத் தன் அருளை வழங்கிக் கொண்டே செல்வானாக. (அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல் நாளிதழ் 2 ஜூன் 2023 பக்கம் 2-7)